**கவனிக்க.**-2021.07.22 ஆந் திகதிய 2238 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2239 - 2021 ජූලි මස 30 වැනි සිකුරාදා - 2021.07.30

*2239 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு யூலை மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1550 |


**கவனிக்க.**- (i) மனித உரிமைகள் அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2021, யூலை மாதம் 16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) பலாங்கொடை ஆனந்த மைத்திரிய மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2021, யூலை மாதம் 16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(iii) சமாதி தியான மற்றும் யோகாசன நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2021, யூலை மாதம் 16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2021, ஒகத்து மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, ஒகத்து மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1547 - B 82253-5,403 (2021/ 07)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.*

***3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :***

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்தகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

***4. பணிக்கமர்த்தும் நியதிகள் :***

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

***6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :***

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.*

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.*

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
   (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
   (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
   (III) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
      (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
      (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
   (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
   (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
   (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
   (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
   (vIII) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
   (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
   (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
   (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
   (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
   (xIII) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## சுகாதார அமைச்சு

### ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்குமான திணைக்களப் பரீட்சை - 2021, செத்தெம்பர்

*2014.10.11 ஆந் திகதிய 1883/ 17 ஆம் இலக்கமுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள சுகாதார சேவையின் வைத்திய உத்தியோகத்தர்கள் தொடர்பான நியதிச் சட்டக்கோவையின் 8 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்கள் II ஆம் தரத்திற்கு உயர்த்தப்படுவதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்பும், அத்தோடு பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்கள் தமது சேவையில் உறுதிப்படுத்துவதற்கு முன்பும், உத்தியோகத்தர் ஒருவர் அந்நியமனம் கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து மூன்று வருட காலத்தினுள் சித்தியடைய வேண்டியதுமான திணைக்களப் பரீட்சை 2021.09.12 ஆந் திகதி சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடாத்தப்படும் என்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது. பரீட்சை நடாத்தப்படும் இடமும் கால அட்டவணையும் அனுமதி அட்டையில் குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்படும்.*

*2. **தகைமைகள்**.- உரிய பரீட்சையினைப் பூரணப்படுத்தியிராத ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்களும், நியமனத்தில் உறுதிப்படுத்தப்படாத பல் சத்திர சிகிச்சை நிபுணர்களும் இந்தப் பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்க முடியும். மேலும் இத்திணைக்களப் பரீட்சையினைப் பூரணப்படுத்தியிராத நிர்வாகத் தரத்தைச் சேர்ந்த வைத்திய உத்தியோகத்தர் தரத்தைச் சேர்ந்தவர்களும், விசேட வைத்திய நிபுணர் தரத்தைச் சேர்ந்தவர்களும் இப்பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்க முடியும்.*

*3. **விண்ணப்பங்கள்**.- இச் சுற்றுநிருபத்தில் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தைப் போன்று விண்ணப்பதாரிகளினால் தயாரித்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் 2021.08.06 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் நிறுவனத் தலைவரிடம் கையளிக்கப்பட வேண்டும். விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தியுள்ளதாக நிறுவனத் தலைவர் சான்றுப்படுத்திய பின் விண்ணப்பமானது "சுகாதார அமைச்சு, கொழும்பு 10, இலக்கம் 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, 'சுவசிரிபாய கட்டிடம்', பணிப்பாளர் (பரீட்சை)" அவர்களுக்கு 2021.08.12 ஆந் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்பு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலின் மூலம் அனுப்ப வேண்டும். தனது விண்ணப்பத்துடன் முகவரி எழுதப்பட்ட ரூபா 45.00 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட 9" × 4" அளவுள்ள கடித உறைகள் 2 அனுப்ப வேண்டும். (இதில் விரும்பிய வகையில் அலுவலக முகவரி அல்லது சொந்த முகவரியை எழுதலாம்).*

***கவனிக்கவும்**.- மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய விண்ணப்பம் A4 தாளின் இரண்டு பக்கங்களையும் உபயோகித்து தயாரிக்கப்பட வேண்டும். முதற்ப க்கத்தில் இலக்கம் 01-04 (உ) தொடக்கமும் இரண்டாம் பக்கத்தில் 04(ஊ)-09 தொடக்கமும் அமையும் வண்ணம் விண்ணப்பம் தயாரிக்கப்படல் வேண்டும். மேற்படி தகவல்களுக்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.*

*04. **பரீட்சைக் கட்டணம்**.-*

(i) *முதன் முறையாகப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்கள், பரீட்சைக் கட்டணத்தினின்றும் விதிவிலக்கப்படுவர். ஏனைய விண்ணப்பதாரர்கள் ஒரு விடயத்திற்கு ரூபா 25 வீதம் மதிப்பிழக்கப்படாத முத்திரைகளை விண்ணப்பத்தில் ஒட்டி அதன் மேல் தனது கையொப்பத்தையும் திகதியையும் இட்டு அதை செல்லுபடியற்றதாக்க வேண்டும்.*

(ii) *எக்காரணத்தைக் கொண்டும் இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் வேறு பரீட்சையொன்றின் பொருட்டு மாற்றவோ அல்லது மீளச் செலுத்தப்படவோமாட்டாது.*

*05. **பரீட்சைக்கு உட்படுத்தல்**.-*

(i) *ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும். அவ் அனுமதிப்பத்திரங்களை உரிய முறையில் நிரப்பி பரீட்சை நிலைய அதிபருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டைகள் சமர்ப்பிக்கப்படாத எந்த ஒரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.*

(ii) *விண்ணப்பதாரர்களினால் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை நிலைய அதிபருக்குத் தனது அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதன் பொருட்டு கீழே குறிப்பிடப்படும் ஆவணங்களில் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்:-*

*(அ) தேசிய ஆள் அடையாள அட்டை ;*
*(ஆ) சுகாதார அமைச்சு அல்லது அதனுடன் ஏற்புடைய நிறுவனங்களினால் முறைப்படி வழங்கப்பட்ட அடையாள அட்டை ;*
*(இ) வலுவுள்ள சாரதி அனுமதிப்பத்திரம் ;*
*(ஈ) வலுவுள்ள கடவுச்சீட்டு.*

(iii) *தவிர்க்க முடியாத காரணத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாதவிடத்து சுகாதார அமைச்சின் இணையத்தளத்தில் தங்களினது பரீட்சைச் சுட்டெண், பரீட்சை நிலையம் என்பவற்றினை பெற்றுக்கொண்டு தங்களது கையொப்பத்தினை உறுதிப்படுத்திய திணைக்களத் தலைவரின் கடிதத்துடன் இணையத்தளத்தில்*

குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை நிலையத்தில், இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சுட்டெண்ணில் தாங்கள் பரீட்சையினை மேற்கொள்ள முடியும். அனுமதி அட்டை கிடைக்கப்பெற்றவர்கள் கட்டாயமாக கையொப்பத்தினை உறுதிப்படுத்திக்கொண்டு வருதல் வேண்டும். (கையொப்பத்தினை உறுதிப்படுத்திய கடிதம் அல்லது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையினை முன்னளிப்பு செய்யாதவர்கள் பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்). (சுகாதார அமைச்சின் இணையத்தள முகவரி : www.health.gov.lk).

06. **பரீட்சைத் திட்டம்**.- இப்பரீட்சை, மூன்று எழுத்து மூல கட்டுரை வினாப்பத்திரங்களையும் சிங்களம்/ தமிழ் வாய்மொழிப் பரீட்சை என 04 பகுதிகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிற்கும் 100 புள்ளிகள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. தேர்ச்சியடைவதன் பொருட்டு ஒரு விடயத்திற்கு குறைந்தபட்சம் 50 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஒரு அமர்வில் அல்லது பல அமர்வுகளில் பிரிவுகளுக்குத் தோற்றி பரீட்சையைப் பூரணப்படுத்திக்கொள்ளலாம்.

07. **பரீட்சைப் பாடத்திட்டம்**.-

7.1 ***எழுத்துப் பரீட்சை***

7.1.1 *தாபனவிதிக்கோவை வினாத்தாள்*

நேரம் 02 மணித்தியாலம். 08 வினாக்களில் 05 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

பாடவிதானம்

(i) சுகாதார அமைச்சின் சுகாதாரத் திணைக்களத்தின் பொதுவான ஒழுங்குவிதிகள்.

(ii) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் ஒழுங்குவிதிகள்.

(iii) தாபனவிதிக்கோவை

I ஆம் பிரிவு :- VI, VII, VIII, IX, XII, XIII, XIV, XV, XVI, XVII, XVIII, XXIII, XXIV, XXV, XXVI, XXVII, XXVIII, XXX, XXXI, XXXII அத்தியாயங்கள்.

II ஆம் பிரிவு :- XLVII, XLVIII ஆகிய அத்தியாயங்கள்.

7.1.2 *வைத்தியசாலைகள், மருந்துச்சாலைகள் என்பனவற்றின் நிர்வாகம் வினாத்தாள்*

நேரம் : 1 1/2 மணித்தியாலம். 07 வினாக்களில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

பாடவிதானம்

சுகாதாரக் கைந்நூல்

(i) வைத்தியசாலைகள், பொதுச் சுகாதார நிர்வாகம்

(ii) ஆய்வுகூட சேவை முகாமைத்துவம்

(iii) மருந்து முகாமைத்துவம்

7.1.3 *கணக்கியல் :*

நேரம் 02 மணித்தியாலம். 07 வினாக்களில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்,

பாடவிதானம்

(i) சுகாதாரத் திணைக்களத்தில் களஞ்சியக் கணக்கிடல் ஒழுங்குவிதிகள்

(ii) சுகாதாரத் திணைக்களத்தினால் வெளியிட்ட முகாமைத்துவ வழிகாட்டிக் கைந்நூலில் நிதி தொடர்பான பந்தி

(iii) சுகாதார வைத்திய உத்தியோகத்தர் ஒருவரின் நாளாந்த கடமைகளுக்கு ஏற்புடைய நிதி ஒழுங்குவிதி

| | |
|---|---|
| I ஆம் அத்தியாயம் - | நிதி ஒழுங்குவிதி 1, 2, 78 |
| II ஆம் அத்தியாயம் - | நிதி ஒழுங்குவிதி 90, 91, 101, 102, 103, 104, 105, 106, 107, 108, 109, 110, 113, 115, 118, 119 |
| III ஆம் அத்தியாயம் - | நிதி ஒழுங்குவிதி 124, 125, 126, 127, 128, 131, 133, 134, 135, 136, 137, 138, 139, 140, 142, 143, 151, 152, 154, 155, 156, 189 |
| V ஆம் அத்தியாயம் - | நிதி ஒழுங்குவிதி 200, 201, 215, 225, 238, 245, 255, 257, 260 |
| VI ஆம் அத்தியாயம் - | நிதி ஒழுங்குவிதி 380, 381, 382, 383, 384, 385, 386, 388, 389, 390, 391, 392, 393, 394 |
| VII ஆம் அத்தியாயம் - | நிதி ஒழுங்குவிதி 488, 493 |
| XIII ஆம் அத்தியாயம் - | நிதி ஒழுங்குவிதி 715, 716, 756, 757, 758 |

பெறுகை வழிகாட்டிக் கோவை :

*1 ஆம் அத்தியாயம் - அனைத்துப் பிரிவுகளும்*

*2 ஆம் அத்தியாயம் - 2.3, 2.4, 2.5, 2.6, 2.7, 2.8*

*3 ஆம் அத்தியாயம் - 3.1, 3.2, 3.3, 3.4, 3.5, 3.6, 3.7, 3.8, 3.9*

7.2 **சிங்களம்/தமிழ் வாய்மொழிப் பரீட்சை.**- சிங்களம்/தமிழ் ஆற்றலை அளப்பதன் பொருட்டு திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்களினால் நடாத்தப்படும் வாய்மொழிப் பரீட்சையாகும். தனது நாளாந்த கடமைகளில் ஈடுபடும்பொழுது மேலோங்கும் நிகழ்வுகள் தொடர்பாக சிங்கள மொழி மூல உத்தியோகத்தர்களுக்கு தமிழ் மொழியிலும், தமிழ் மொழி மூல உத்தியோகத்தர்களுக்கு சிங்கள மொழியிலும் கலந்துரையாடுவதற்கு உத்தியோகத்தருக்கு உள்ள ஆற்றலைப் பரீட்சித்தல். (நேரம் : 10 நிமிடம்)

08. **பரீட்சை தொடர்பான ஒழுங்குவிதிகளைக் கடைப்பிடித்தல்.**- பரீட்சார்த்திகள் குறிப்புக்களை தன்னிடத்தில் வைத்து பார்த்து எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினைப் பார்த்து எழுதுதலும் தடை செய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் உதவி செய்தலைத் தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல், இலத்திரனியல் உபகரணங்களைப் பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளை மீறும் எந்தவொரு பரீட்சார்த்தி மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

09. தயவுசெய்து இச்சுற்றுநிருபத்தை உங்கள் நிறுவனத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு அறிவிப்பதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்ளவும். இத்தகவல்கள் www.health.gov.lk எனும் இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.

**குறிப்பு.**- இச்சுற்றுநிருப கடிதத்தில் சிங்களம், தமிழ், ஆங்கில மொழி பெயர்ப்புக்களில் ஏதாவது ஒவ்வாமை காணப்படின் சிங்கள மொழி மூல அறிவித்தலே வலுவுடையதாகும்.

வைத்தியர் எஸ். எச். முணசிங்ஹ,
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

சுகாதார அமைச்சு,
"சுவசிரிபாய",
இல. 385, வணக்கத்துக்குரிய பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10,
2021.07.20.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக பிரயோகத்தின் பொருட்டு)

**ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்குமான திணைக்களப் பரீட்சை – 2021, செத்தெம்பர்**

01. (அ) (i) விண்ணப்பதாரரின் முழுப்பெயர் (தமிழில்) :..........................................................................................
...............................................................................................................................................

(ii) விண்ணப்பதாரரின் முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |

(iii) முதல் எழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) :...........................................................................................
...............................................................................................................................................

(iv) முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :-

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |

(ஆ) (i) பதவி (உரிய கூட்டினுள் (✓) அடையாளமிடுக).

(i) வைத்திய உத்தியோகத்தர் : ☐ (ii) பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர் : ☐

(ii) தகுதிகூர் நிலைக்கால நியமனம் பெற்ற திகதி :..................................

(iii) ஆரம்ப தரத்திற்கு நியமிக்கப்பட்ட திகதி/ தரம் II :................................

02. நீங்கள் இம்முறை தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் விடயங்களுக்கு முன்னால் உள்ள கூட்டினுள் (✓) அடையாளத்தை இடவும். தோற்றாவிடின் (x) குறியை இடவும்.

வைத்தியசாலைகள் மருந்துச்சாலைகள் என்பவற்றின் நிர்வாகம் ☐ தாபன விதிக்கோவை ☐ கணக்கியல் ☐

சிங்களம் வாய்மொழி ☐ தமிழ் வாய்மொழி ☐

03. பரீட்சைக்குத் தோற்றும் மொழி (உரிய கூட்டினுள் (✓) அடையாளத்தை இடவும்.)

சிங்களம் : ☐ ஆங்கிலம் : ☐ தமிழ் : ☐

04. (அ) (i) தற்பொழுது சேவையாற்றும் சேவை நிலையம் :-----.

(ii) சேவை நிலையம் நிர்வகிக்கப்படுவது : மத்திய அரசின்கீழ் ☐

மாகாண அரசின்கீழ் ☐

(ஆ) (i) மாகாண சபையெனின் உரிய மாகாணம் :-----.

(ii) அதற்குரிய மாவட்டம் :

(இ) கையடக்கத் தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(ஈ) தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

(உ) கீழ்வரும் பரீட்சை நிலையங்களுள் விரும்பிய பரீட்சை நிலையம்.- (தெரிவுசெய்யும் பரீட்சை நிலையத்திற்கு போதிய விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து அண்மையிலுள்ள பரீட்சை நிலையத்திற்கு அல்லது சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும் பரீட்சை நிலையத்திற்கு அழைக்கப்படுவர்) பொருத்தமான கூட்டினுள் சரி (✓) அடையாளமிடுக.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | | கந்தானை | | அம்பாந்தோட்டை | | அம்பாறை | |
| களுத்துறை | | காலி | | பதுளை | | வவுனியா | |
| குருநாகல் | | அநுராதபுரம் | | இரத்தினபுரி | | பொலநறுவை | |
| கண்டி | | மட்டக்களப்பு | | யாழ்ப்பாணம் | | திருகோணமலை | |

(ஊ) அனுமதிப்பத்திரம் அனுப்புவதன் பொருட்டு பிழையற்ற தெளிவாக முகவரி எழுதப்பட்ட 9" × 4" அளவுள்ள ரூபா 45.00 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்ட கடித உறைகள் இரண்டு விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

(எ) (i) அஞ்சல் முகவரி (சிங்களத்தில் அல்லது தமிழில்) :-----.

(ii) அஞ்சல் முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-----.

05. (அ) இதற்கு முன் இப்பரீட்சைக்குத் தோற்றி உள்ளீரா? :-----.

(ஆ) முதன் முறை அல்லாவிடின் முத்திரைகள் ஒட்டப்பட்டுள்ளனவா? அவ்வாறு தோற்றி இருப்பின் இம்முறையின் பொருட்டு முத்திரைகள் ஒட்டியுள்ளதா? :-----.

| முத்திரைக் கூட்டில் (முத்திரையை ஒட்டி அதன் மீது கையொப்பமிடுக.) |
|---|

06. விண்ணப்பதாரரின் உறுதியுரை:

எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவகையில்-

(i) இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையெனவும், நான் இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன்முறையாக என்றபடியால் கட்டணம் செலுத்தத் தேவையில்லை எனவும்/ முதன் முறை அல்லாதபடியால் ரூபா .......... பெறுமதியான முத்திரைகள் ஒட்டியுள்ளேனெனவும், இவ்விண்ணப்பத்திற்கு என்னால் ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் பெறுமதி நீக்கம் செய்யப்படுவதற்கு முன்பு பாவிக்கப்படாத முத்திரைகள் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ii) சுகாதார அமைச்சினால் பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு அமைந்து நடப்பதற்கும், இப்பரீட்சை தொடர்பான நியதிச் சட்டத்தின்படி நான் தகைமையற்றவன் எனக் காணப்படின் எனது பரீட்சார்த்தத் தன்மையை இரத்துச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் எவ்விதத் தீர்மானத்திற்கும் நான் அமைவேன் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----------,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

07. சுயவிபரக் கோவையினைக் கையாளும் விடய உத்தியோகத்தரின் சான்றுரை :

இவ்விண்ணப்பமானது விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் என்னிடம் கையளிக்கப்பட்டது என்றும், சுயவிபரக் கோவையில் உள்ள தகவல்களின் அடிப்படையில் சரியாகப் பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும், இத்திணைக்களப் பரீட்சைக்கு தோற்றுவதற்குத் தேவையான தகைமைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும் இவ்விண்ணப்பப்பத்திரத்தின் பிரதி ஒன்று சுயவிபரக் கோவையில் கோவையிடப்பட்டுள்ளது என்றும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

---------,
கையொப்பமும், திகதியும்.

......................
பெயர்

08. நிறுவனத் தலைவரின் சான்றுரை :

திருவாளர்/ திருமதி/ செல்வி ................................ என்பவர் எனது நிறுவனத்தில் சேவை புரியும் வைத்திய உத்தியோகத்தர்/ பல் வைத்தியர் என்றும், இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறை/ அல்லாதபடியால் ரூபா ............ பெறுமதியான முத்திரைகள் இவ்விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளதாகவும்/ முத்திரை ஒட்டவேண்டியதில்லை எனவும் விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் விண்ணப்பதாரரின் பெயர்வழிக்கோவையிலுள்ள விபரங்களின் படி பிழையற்றவைகளெனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவருக்குத் தகைமைகள் உண்டு எனவும் எனது முன்னிலையில் கையொப்பம் இட்டார் எனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

------
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

திகதி :-----.

09. பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு/ விசேட இயக்கத் தலைவரின் சான்றிதழ் :

திரு./ திருமதி/ செல்வி ................................ என்பவர் ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர் ஒருவராக/ பல் சத்திர சிகிச்சை வைத்தியர் ஒருவராக எனது நிறுவனத்தில் சேவையாற்றுகின்றார் எனவும் விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் விண்ணப்பதாரரின் பெயர் வழிக்கோவையிலுள்ள விபரங்களின் படி பிழையற்றவைகளெனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவருக்குத் தகைமைகள் உண்டு எனவும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

-----,
பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு/ விசேட இயக்கத்
தலைவரின் கையொப்பம்
(பதிவு முத்திரை இடப்படுதல் வேண்டும்).

திகதி :-----.

(தேவையற்றவற்றைக் கீறிவிடவும்.)

07-739

## பரீட்சை அறிவித்தல்

## இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III இற்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2021

இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III பதவிகளில் நிலவும் வெற்றிடங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தகைமையுடைய இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அதற்கான விண்ணப்பப்படிவங்கள் இலங்கை பரீட்சை திணைக்களத்தின் www.doenets.lk எனும் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், நிகழ்நிலை (online) முறையினூடாக மாத்திரமே விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்க முடியும். விண்ணப்பப்படிவங்களை நிகழ்நிலை மூலம் சமர்ப்பித்ததன் பின்னர் அதனை தரவிறக்கம் செய்து அச்சுப் பிரதியில் விண்ணப்பதாரியின் ஒப்பத்தை சான்றுப்படுத்தி, நிறுவனத் தலைவரின் சான்றுரையுடன் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், நிறுவனம் சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கை பரீட்சை திணைக்களம், த.பெ. 1503, கொழும்பு" எனும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III இற்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2021" எனத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினம் 2021 ஓகத்து மாதம் 23 ஆந் திகதி 24:00 மணி ஆகும்.

இப் பரீட்சையின் முதலாம் பகுதியானது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் விதிமுறைகளுக்கு அமைவாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2021 செத்தெம்பர் அல்லது ஒற்றோபர் மாதம் கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும். நாட்டில் ஏற்படக் கூடிய விசேட நிலைமையின் போது மாத்திரம் பரீட்சையை நாடளாவிய ரீதியில் நடாத்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். எவ்வாறாயினும் ஏதேனும் ஒரு பரீட்சை நிலையத்திற்குப் போதியளவு விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காதவிடத்து குறித்த பரீட்சை நிலையத்திற்கு விருப்பத் தெரிவைக் குறிப்பிட்ட விண்ணப்பதாரிகள் வேறு பரீட்சை நிலையத்திற்காகக் கருத்திற் கொள்ளப்படுவர். (இது தொடர்பான மேலதிக விபரங்கள் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன). அரசாங்க சேவை ஆணைக்குழுவின் விதிமுறைகளுக்கு அமைவாக இப் பரீட்சையைப் பிற்போடவோ அல்லது இரத்துச் செய்யவோ பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அதிகாரம் உண்டு.

குறிப்பு : விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியை பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் கட்டாயமானதாகும். அச்சுப் பிரதி தபாலில் காணாமற் போனதாக அல்லது தாமதமானதாகக் குறிப்பிட்டு செய்யப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்த முடியாது. இறுதித் தினம் வரை விண்ணப்பப்படிவங்களைத் தாமதப்படுத்துவதன் காரணமாக ஏற்படும் பாதிப்புக்களை விண்ணப்பதாரிகளே ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.

1. இவ் அறிவித்தலில் "நியமிப்புச் செய்யும் அதிகாரி" என்பதன் மூலமாகக் கருதப்படுவது, அரசாங்க சேவை ஆணைக்குழுவாகும் என்பதுடன் "சேவை" என்பதன் மூலம் கருதப்படுவது, இலங்கை கணக்காளர் சேவையாகும்.

2. **ஆட்சேர்ப்பு முறை :-**

2.1 எழுத்துமூலப் பரீட்சை :- நாடளாவிய சேவைகள் மற்றும் அரசாங்க சேவையின் நிறைவேற்றுத் தரப் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யும் பொதுப் போட்டிப் பரீட்சை இதற்கு ஏற்புடையதாகும். இப் போட்டிப் பரீட்சையானது பின்வருமாறு இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும். முதற் பகுதியின் (பொதுப் பகுதி) ஒவ்வொரு வினாப் பத்திரத்திற்கும் 40% அல்லது அதனிலும் கூடிய மற்றும் மொத்தப் புள்ளிகளின் கூட்டுத்தொகை 100 அல்லது அதனிலும் கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் இரண்டாம் பகுதிக்கு அழைக்கப்படுவர்.

முதலாம் பகுதி (பொதுப் பகுதி)

| வினாப்பத்திரம் | காலம் | உச்சப் புள்ளிகள் | சித்தியடைவதற்காகப் பெற வேண்டிய குறைந்தபட்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. நுண்ணறிவுப் பரீட்சை | 1 1/2 மணித்தியாலம் | 100 | 40 |
| 2. கிரகித்தல் | 02 மணித்தியாலம் | 100 | 40 |

இரண்டாம் பகுதி

| சேவை | பாட எண் | வினாப்பத்திரம் | காலம் | உச்சப் புள்ளிகள் | சித்தியடைவதற் காகப் பெற வேண்டிய குறைந்த பட்ச புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| இலங்கை கணக்காளர் சேவை | 21 | நிதி மற்றும் முகாமைத்துவக் கணக்கீடு | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| | 22 | உயர் கணக்காய்வு மற்றும் பொருளாதார பகுப்பாய்வு | 03 மணித்தியாலம் | 100 | 40 |

2.2 **நேர்முகப் பரீட்சை** :- எழுத்துமூலப் பரீட்சையின் எல்லா வினாப்பத்திரங்களுக்கும் தோற்றிய விண்ணப்பதாரிகளுள் ஒவ்வொரு எழுத்துமூல வினாப்பத்திரத்திற்கும் உரிய புள்ளிகளில் குறைந்தபட்சம் 40% அல்லது அதனிலும் கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகள் மாத்திரம் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளின் திறன் ஒழுங்கிற்கு அமைய தகைமைகளைப் பரிசீலிக்கும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதோடு, குறித்த நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும் திகதி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய தீர்மானிக்கப்படும். எழுத்துமூலப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் திறன் ஒழுங்கின் அடிப்படையில் அரசாங்க நிறைவேற்றுத் தரத்தின் இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III இற்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் நிலவும் வெற்றிடங்களுக்கு நியமிப்பதற்காகத் தெரிவு செய்யப்படுவர்.

3. இப் பரீட்சையின் மூலம் மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை 101 ஆகும். இப் பதவிகளுக்கு நியமிப்பு செய்யப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி என்பன அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய தீர்மானிக்கப்படும். குறிப்பிட்ட அளவிலான வெற்றிடங்களின் எண்ணிக்கையை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உண்டு. இறுதி வெற்றிடங்களுக்கு அல்லது குறிப்பிட்ட சில இறுதி வெற்றிடங்களுக்கு சம அளவிலான புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட பரீட்சார்த்திகள் வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட அதிகமாகக் காணப்படும் சந்தர்ப்பத்தில் அவ் வெற்றிட எண்ணிக்கையை நிரப்புவது குறித்த தீர்மானம் நடைமுறை ஒழுங்குவிதிகளின் 80 ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் வழங்கப்படும்.

4. **ஆட்சேர்ப்புத் தகைமைகள் :-**

(அ) i. இலங்கைப் பிரசையாக இருத்தல்.

ii. சிறந்த நடத்தையுடையவராக இருத்தல்.

iii. நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் பணிபுரிவதற்கும் பதவிக்கான கடமைகளை மேற்கொள்வதற்குமான போதிய உடல் மற்றும் உளத் தகைமைகளைக் கொண்டிருத்தல்.

(ஆ) கல்வி/ தொழில்சார்/அனுபவம் குறித்த தகைமைகள்:-

i. பின்வரும் ஏதேனும் ஒரு தகைமையுடன் விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் தினத்தன்று அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் 05 வருடங்களுக்குக் குறையாத திருப்திகரமான, தொடர்ச்சியான, நிரந்தர சேவைக் காலத்துடன் உரிய தினத்தன்று குறைந்தபட்சம் 5 சம்பளவேற்றங்களைப் பெற்றிருத்தல்.

a. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் வர்த்தகம், முகாமைத்துவம், கணக்கீடு, பொருளியல் போன்ற துறைகளில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்;

அல்லது

b. இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியின்/இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தின் கணக்கீடு அல்லது வர்த்தகம் பற்றிய உயர் டிப்ளோமாவைப் பெற்றிருத்தல் அல்லது உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமாவைப் பெற்றிருத்தல் ;

அல்லது

c. இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் அல்லது வேறேதும் பொதுநலவாய நாடொன்றின் பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் தகுதிச் சான்றுடைய II அல்லது இடைநிலைப் பரீட்சை அல்லது கணக்கீடு மற்றும் வியாபார சான்றிதழ் II அல்லது வியாபார படிமுறை பரீட்சை அல்லது நிறுவனம்சார் படிமுறை பரீட்சை அல்லது அதனிலும் உயர் பரீட்சை ஒன்றில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்;

அல்லது

d. ஐக்கிய இராச்சியத்தின் அல்லது வேறு யாதேனுமொரு பொதுநலவாய நாட்டின் பட்டயம் பெற்ற முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகமொன்றினால் நடாத்தப்படும் செலவினம் மற்றும் முகாமைத்துவம் பரீட்சையின் I மற்றும் II பகுதிகளில் அல்லது இடைநிலைப் பரீட்சையில் அல்லது அதனிலும் உயர் பரீட்சை ஒன்றில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்;

அல்லது

e. ஐக்கிய இராச்சியத்தின் அல்லது வேறு யாதேனுமொரு பொதுநலவாய நாட்டின் சான்றிதழ் பெற்ற கணக்காளர்களின் கணக்கியல் நிறுவனத்தின் I ஆவது தொழில்சார் மட்டத்தைச் சேர்ந்த அல்லது அதனிலும் உயர் மட்டத்திலான பரீட்சை ஒன்றில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்;

அல்லது

f. ஐக்கிய இராச்சியத்தின் அல்லது வேறு யாதேனுமொரு பொதுநலவாய நாட்டின் சான்றிதழ் பெற்ற கணக்காளர்களின் பட்டயச் சங்கத்தின் I மற்றும் II பகுதிகளுக்குரிய பரீட்சையில் அல்லது அதனிலும் உயர் மட்டத்திலான பரீட்சை ஒன்றில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்;

அல்லது

g. ஐக்கிய இராச்சியத்தின் செயலாளர்கள் மற்றும் நிருவாகிகளின் பட்டய நிறுவகத்தின் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது

h. இலங்கை சான்றிதழ் பெற்ற முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் முகாமைத்துவ மட்ட அல்லது அதனிலும் உயர் மட்டத்திலான பரீட்சை ஒன்றில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

(ii) அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமான MN 1 – 2006 (ஏ) எனும் சம்பள அளவுத் திட்டம் அல்லது அதிலும் கூடிய சம்பள அளவுத் திட்டமொன்றினைக் கொண்டுள்ள பதவியொன்றில் 10 வருடங்களுக்குக் குறையாத திருப்திகரமான சேவைக் காலம் ஒன்றினைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் உரிய தினத்தன்று ஆகக் குறைந்தது 10 சம்பள ஏற்றங்களைப் பெற்றிருத்தல்.

(இ) தகைமைகள் பற்றிய வரையறைகள்

i. இப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளையும் விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் சகல வழிகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

ii. எந்தவொரு மதத்தையும் சேர்ந்த துறவிக்கு இப் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கவோ அல்லது தோற்றவோ அனுமதி கிடையாது.

iii. விண்ணப்பிப்பதற்குரிய தகைமைகளைப் பெறுவதற்கு உடன் முந்திய ஐந்து வருடங்களினுள் உரிய தினங்களில் அனைத்து சம்பளவேற்றங்களையும் பெற்றிருத்தல் வேண்டும்.

iv. தகைமைகள் பரீட்சிக்கப்படும் தினத்தன்று அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்று தண்டனையொன்றிற்கு உள்ளாகியிருத்தல் ஆகாது.

v. இலங்கை கணக்காளர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக நடாத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகள் (வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு நடாத்தப்படும் விசேட மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை உள்ளடங்கலாக) இரண்டு தடவைகளுக்கு மேல் தோற்றுவதற்கு எந்தவொரு நபருக்கும் அனுமதி கிடையாது.

vi. சேவைக்கு நியமிப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாக ஏற்றுக் கொள்வதன் பொருட்டு விண்ணப்பதாரி ஒருவர், விண்ணப்பங்கள் கோரப்படும் வர்த்தமானி பிரசுரிக்கப்படும் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் 4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை சகல வழிகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

5. **ஆட்சேர்ப்பிற்கான பொது நிபந்தனைகள் : -**

5.1 அரசாங்க சேவையின் நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும், 1670/33 ஆம் இலக்க மற்றும் 2010 செத்தெம்பர் 10 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை கணக்காளர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும், குறித்த சேவைப் பிரமாணக்குறிப்பிற்கு இதுவரை மேற்கொள்ளப்பட்ட அல்லது எதிர் காலத்தில் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும், தாபன விதிக் கோவையின் மற்றும் நிதி ஒழுங்கு விதிகளின் ஏற்பாடுகளுக்கும், திணைக்களம் சார்ந்த ஏனைய கட்டளைகளுக்கும், 1589/30 ஆம் இலக்க மற்றும் 2009.02.20 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும் அமைவாகத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்படுவார்.

5.2 இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது. மேலும், தாங்கள் விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு/ தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு உதவுத் தொகைகள் செலுத்துதல் வேண்டும்.

**குறிப்பு** : 2016.01.01 ஆந் திகதியின் பின்னர் அரசாங்க சேவையின் பதவியொன்றிற்கு நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள், ஓய்வூதிய முறை தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானத்திற்கு கட்டுப்படுதல் வேண்டும்.

5.3 ஆட்சேர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் ஒரு வருட பதிற்கடமை காலப்பகுதிக்கு உட்படுவர். ஆட்சேர்க்கப்பட்டு 03 வருடங்களினுள் சேவை பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

5.4 அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 18/2020 பிரகாரம் பதவிக்கு நியமனம் பெற்று 05 வருடங்களினுள் உரியவாறு அரசகரும மொழி/மொழிகளில் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

5.5 விதித்துரைக்கப்படும் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவைக்கு சமுகமளித்தல் வேண்டும்.

5.6 தமக்குக் கையளிக்கப்படும் பதவியின் கடமைகளை உரிய தினத்தில் பொறுப்பேற்கத் தவறும் மற்றும்/அல்லது நியமிக்கப்பட்ட பதவியொன்றின் அல்லது நியமிக்கப்பட்ட பிரதேசத்தில் கடமைகளைப் பொறுப்பேற்பதை நிராகரிக்கும் அல்லது தவிர்க்கும் விண்ணப்பதாரிகளின் நியமனத்தை இரத்துச் செய்வதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவின் கட்டளைப்படி அதிகாரமுண்டு.

6. **சம்பளக் கட்டமைப்பு மற்றும் மாதாந்த சம்பள அளவுத்திட்டம் :-**

2016.02.25 ஆம் திகதிய 03/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் அட்டவணை I பிரகாரம் இப்பதவிகளுக்குரிய மாதாந்த சம்பள அளவுத் திட்டம் ரூ. 47,615-10x1,335-8x1,630 - 17x 2,170 - ரூபா 110,895.00 (SL-1-2016) ஆகும். இதற்கு மேலதிகமாக தாங்கள் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்பட்டவாறு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் ஏனைய படிகளுக்கும் உரித்துடையவர் ஆவீர்கள்.

7. பரீட்சை நிபந்தனைகள் :-

I. இப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தாம் விரும்பும் மொழியொன்றில் பரீட்சைக்குத் தோற்ற முடியும். பரீட்சார்த்திகள் இப் பரீட்சைக்கு தான் விண்ணப்பிக்கும் சேவைகளுக்குரிய அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் தோற்ற வேண்டும் என்பதுடன், அதன் பொருட்டு ஒரு மொழிமூலத்தை மாத்திரம் தெரிவு செய்தல் வேண்டும். பரீட்சார்த்திக்கு தமது விண்ணப்பத்தில் காட்டப்பட்ட பரீட்சை மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

II. நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப்படிவத்தை ஆங்கில மொழியில் மாத்திரம் பூர்த்தியாக்குதல் வேண்டும். விண்ணப்பதாரியினால் நிகழ்நிலை மூலம் சமர்ப்பிக்கப்பட்ட மென்பிரதிக்கு மேலதிகமாகப் பதிவுத் தபாலில் அச்சுப் பிரதியொன்றையும் அனுப்பி வைத்தல் வேண்டும். மென்பிரதி மற்றும் அச்சுப்பிரதி (printout) ஆகிய இரண்டும் பரீட்சை திணைக்களத்திற்குக் கிடைக்கப்பெற்றதன் பின்னர் உறுதிப்படுத்தும் (verify) நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், செல்லுபடியான விண்ணப்பப்படிவமாக திணைக்களத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது/ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பது பற்றி கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ் செய்தியொன்றின் (SMS) மூலம் அறிவிக்கப்படும். நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்துவதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள பொது அறிவுறுத்தல் படிவத்தை (Common Instruction) தரவிறக்கம் செய்து கொள்ளவும். விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்துகையில் இவ் அறிவுறுத்தல்களைக் கட்டாயமாகப் பின்பற்றவும். பின்னர் பரீட்சை தொடர்பில் வினவும் சந்தர்ப்பத்தில் சமர்ப்பிப்பதற்காக விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியொன்றை தம்வசம் வைத்துக் கொள்ளல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியொன்றைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அதில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியான திருத்தமாகக் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது. பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் எந்தவொரு அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

III. இப் பரீட்சையின் முதலாவது பகுதியின் பரீட்சைக் கட்டணம் ரூ. 1000.00 (ஆயிரம்) ஆகும். இரண்டாம் பகுதிக்கு ஒரு வினாப்பத்திரத்திற்கு ரூ. 300.00 (முந்நூறு) ஆகும். முதலாம் பகுதியில் சித்தியடைந்ததன் பின்னரே இரண்டாம் பகுதிக்கான கட்டணத்தை செலுத்துதல் வேண்டும். பரீட்சைக் கட்டணத்தை செலுத்துகையில் நிகழ்நிலை முறைமை ஊடாக வழங்கப்பட்டுள்ள பின்வரும் கட்டணம் செலுத்தும் முறையின் கீழ் மாத்திரம் செலுத்துதல் வேண்டும்.

i. எந்தவொரு வங்கியினதும் கடனட்டைகள் மூலம் ( Any Bank Credit Cards)

ii. இணையக் கொடுப்பனவு வசதிகளுடன் கூடிய எந்தவொரு வங்கியினதும் பற்று அட்டைகள் மூலம் ( Bank Debit Card with Internet Payment Facility)

iii. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறை மூலம் (Bank of Ceylon Online Banking Bill Payment Method)

iv. எந்தவொரு இலங்கை வங்கிக் கிளை மூலமாகவும் (Bank of Ceylon any Branch)

v. தபால் திணைக்களத்தின் தபால் அலுவலகத்தின் மூலம் (Postal Department Payment at Post Office)

**குறிப்பு** – மேற்குறித்த முறைகள் மூலம் கட்டணம் செலுத்தும் முறை பற்றிய அறிவுறுத்தல்கள் பரீட்சை திணைக்களத்தின் இணையத்தளத்தில் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

IV. கட்டணம் கிடைக்கப்பெற்றமை தொடர்பில் குறுஞ் செய்தி (SMS) ஒன்றின் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சையின் இரண்டாவது பகுதிக்கான பரீட்சைக் கட்டணத்தை செலுத்துகையில் விண்ணப்பதாரி ஒருவர் விண்ணப்பித்த அனைத்து சேவைகளுக்குமுரிய எல்லா வினாப்பத்திரங்களுக்கும் வினாப்பத்திரமொன்றிற்கு ரூ. 300.00 (முந் நூறு) வீதம் செலுத்துதல் வேண்டும். பரீட்சையின் முதலாவது பகுதியில் சித்தியடைந்ததன் பின்னர் இரண்டாம் பகுதிக்குரிய அனுமதியட்டையைப் பெற்றுக் கொள்கையில் இத் தொகையை செலுத்துதல் வேண்டும். ஏற்புடையவாறு உரிய தொகையை செலுத்துதல் வேண்டும் என்பதுடன், பரீட்சைக் கட்டணத்தை விடக் குறைவாகவோ அல்லது அதிகமாகவோ செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறித்த கட்டண முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணத்தை செலுத்துகையில் ஏற்படும் தவறுகளுக்கு பரீட்சை திணைக்களம் பொறுப்பேற்காது.

V. பரீட்சைக்காக செலுத்தப்பட்ட தொகை எந்தவொரு காரணத்திற்காகவும் மீளச்செலுத்தப்படவோ அல்லது வேறு ஒரு பரீட்சைக்காக மாற்றம் செய்யப்படவோ மாட்டாது.

VI. விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்திலும் விண்ணப்பதாரியின் ஒப்பம் சான்றுப்படுத்தப் பட்டிருத்தல் வேண்டும். பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி ஒருவர் தனது ஒப்பத்தை நிறுவனத் தலைவர் மூலம் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் மூலம் சான்றுப்படுத்தல் வேண்டும்.

**குறிப்பு** : அனுமதியட்டையின்றி பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசிக்க அனுமதி வழங்கப்பட மாட்டாது. பரீட்சை ஆரம்பிக்கும் தினத்தன்று தனது ஒப்பத்தை சான்றுப்படுத்திய அனுமதிப்பத்திரத்தை மாத்திரமே பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சை அனுமதியட்டை வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்ற அல்லது பதவியொன்றிற்குத் தகைமை பெற்றுள்ளார் என ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படக் கூடாது.

VII. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் உடையவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளனர் என்ற பூர்வாங்க கணிப்பீட்டின் படி வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்குட்பட்ட விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி விண்ணப்பப்படிவங்களை சரியாக நிகழ்நிலை முறை மூலம் சமர்ப்பித்து விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதியட்டைகள் விநியோகிக்கப்படும். பரீட்சைக்காக விண்ணப்பதாரிகளுக்கு அனுமதியட்டைகள் விநியோகிக்கப்பட்டவுடன் அது தொடர்பாகக் குறிப்பிட்டு அறிவித்தலொன்று பத்திரிகைகளிலும் இலங்கை பரீட்சை திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கடந்ததன் பின்னரும் தனது அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரி ஒருவர் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு அது பற்றி இலங்கை பரீட்சை திணைக்களத்தின் நிறுவனம் சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையிடம் வினவுதல் வேண்டும். அவ்வாறு வினவுகையில் விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றை சரியாகக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்பின் வெளிப்பிரதேசத்தில் வசிப்பவராயின், மேற்குறித்த விபரங்களுடன் தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியொன்றை துரிதமாகப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கமும் குறிப்பிடப்பட்ட கோரிக்கைக் கடிதமொன்றை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்புவதன் மூலம் வினவுவது அதிக பலனைத் தரக்கூடியதாக அமையும். அவ்வாறு வினவுகையில் பரீட்சை திணைக்களத்தினால் கோரப்படும் ஏதேனும் ஒரு தகவலை உறுதிப்படுத்துவதற்கு தம் வசம் வைத்துள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக்கட்டணம் செலுத்துகையில் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டின் பிரதி, விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதி, தபாலில் அனுப்பும் போது பெற்றுக் கொண்ட பதிவுத்தபால் பற்றுச்சீட்டு என்பவற்றைத் தயார் நிலையில் வைத்திருத்தல் பயனுள்ளதாக இருக்கும்.

**குறிப்பு** : எழுத்துப் பரீட்சையின் முதலாம் பகுதியின் (பொதுப் பகுதி) ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் 40% அல்லது அதனிலும் கூடிய மற்றும் மொத்தப் புள்ளிகளின் கூட்டுத்தொகை 100 அல்லது அதனிலும் கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம் இரண்டாம் பகுதிக்கு (குறித்த சேவைக்குரிய சிறப்புப் பகுதி) மீளவும் அனுமதி அட்டை விநியோகிக்கப்படும்.

VIII. பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேற்றினை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். இந்த சட்டதிட்டங்களை மீறுகின்ற சந்தர்ப்பத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாக நேரிடும்.

IX. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதன் பொருட்டு பின்வரும் ஏதேனுமொரு ஆவணம் ஏற்றுக் கொள்ளப்படும்.

i. தேசிய அடையாள அட்டை
ii. செல்லுபடியான கடவுச்சீட்டு
iii. செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

அதே போன்று பரீட்சார்த்திகளின் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையில் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காமல் பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்தல் வேண்டும். அவ்வாறு தமது அடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கும் உத்தியோகத்தர்கள் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்ினுள் பிரவேசித்தது முதல் பரீட்சை முடிவடைந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகள் விண்ணப்பதாரிகளை இனங்காணக் கூடிய வகையில் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காமல் இருத்தல் வேண்டும்.

X. திறந்த அடிப்படையில் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் நடாத்தப்படும் இரண்டு போட்டிப் பரீட்சைகளுக்கும் தோற்றவுள்ள விண்ணப்பதாரிகளுக்கு

இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III இற்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதன் பொருட்டு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் மற்றும் திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதன் பொருட்டு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் ஒரே பரீட்சைக்குத் தோற்ற வேண்டியிருப்பதால்,

i. 2234 ஆம் இலக்க மற்றும் 2021.07.16 ஆம் திகதிய வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள நாடளாவிய சேவைகள் மற்றும் அரச சேவையின் நிறைவேற்றுத் தரப் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான பொதுப்

போட்டிப் பரீட்சை – 2021 இன் கீழ் இலங்கை கணக்காளர் சேவையின் திறந்த ஆட்சேர்ப்பிற்கும் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரியொருவர் முதலில் அவ் விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பித்து, அதற்காகக் கிடைக்கப்பெறும் தொடர்பிலக்கத்தை இவ் விண்ணப்பப்படிவத்தின் இலக்கம் 2.0 இல் உள்ளடக்குதல் வேண்டும்.

ii. விண்ணப்பப்படிவத்தின் இலக்கம் 2.0 இல் அக் குறியீட்டிலக்கம் உள்ளடக்கப்படாத விண்ணப்பதாரி யொருவரினால் மேற்குறித்த இலங்கை கணக்காளர் சேவையின் திறந்த ஆட்சேர்ப்பிற்காக விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் காணப்படுமாயின் அவ் விண்ணப்பப்படிவத்திலேயே நிராகரிக்கப்படுவதோடு, திறந்த ஆட்சேர்ப்பிற்கான பரீட்சைக்கு பரீட்சை அனுமதியட்டை கிடைக்கப்பெற்றாலும் அத்தகைய ஒருவரின் அப் பரீட்சைக்கான பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்படும்.

iii. திறந்த ஆட்சேர்ப்பிற்காக வழங்கப்படும் குறியீட்டிலக்கத்தைப் பாதுகாப்பாக வைத்திருப்பது விண்ணப்ப தாரிகளின் கடமையாகும்.

**8. தவறான தகவல்களை சமர்ப்பிப்பதற்கான தண்டனை :**

எவரேனும் பரீட்சார்த்தி ஒருவர் தகைமையற்றவர் எனத் தெரியவருமாயின் பரீட்சையின் முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படலாம். விண்ணப்பதாரியினால் தரப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் தவறானது என்பதைத் தெரிந்திருந்தும் அதனை சமர்ப்பித்திருப்பது தெரியவருமாயின், அல்லது ஏதேனும் முக்கியமானதொரு விடயத்தை அவர் வேண்டுமென்றே மறைத்திருப்பின் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

நியமனத்தைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் மேற்குறித்த விடயங்கள் தெரியவருமாயின் குறித்த நியமனத்தின் கீழ் சம்பளம் அல்லது கொடுப்பனவாக அரசாங்கம்/மாகாண சபையினால் செலுத்தப்பட்டுள்ள அனைத்துத் தொகைகளும் மீள அறவிடப்படும்.

9. இவ் ஒழுங்குவிதிகளில் ஏற்பாடுகள் செய்யப்படாத விடயங்கள் தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

**10. பரீட்சை மொழிமூலம் :-**

(அ) பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

(ஆ) பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலம் ஆட்சேர்ப்பு மொழிமூலமாகக் கொள்ளப்படும்

(இ) பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் விடையளித்தல் வேண்டும்.

(ஈ) தமது விண்ணப்பத்தில் காட்டப்பட்ட பரீட்சை மொழிமூலத்தை மாற்றுவதற்கு விண்ணப்பதாரிக்கு இடமளிக்கப்பட மாட்டாது.

**11. பரீட்சை முறை, நேர்முகப் பரீட்சை மற்றும் நியமனம் :-**

11.1 எழுத்துமூலப் பரீட்சை

11.1.1 முதலாம் பகுதி (பொதுப் பகுதி)

| வினாப்பத்திரம் | பாடத்திட்டம் | வினாப்பத்திரத்தின் தன்மை |
|---|---|---|
| 1. நுண்ணறிவுப் பரீட்சை | பரீட்சார்த்தியிடம் காணப்படும் தர்க்கிக்கும் ஆற்றல், மாற்றீடு, பொருள்கோடல், தொடர்புகளைக் காணல், பெயர்ப்பு, சிக்கல்களைத் தீர்க்கும் ஆற்றல், காரண காரியத் தொடர்புகளைப் புரிந்து கொள்ளல், எதிர்வுகூறல், தகவல் ஒழுங்கமைப்பு, வடிவங்களை இனங்காணல் மற்றும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல் போன்ற திறன்களை மதிப்பிடுவதற்காகத் தயாரிக்கப்படும் பல்தேர்வு வகை வினாக்களைக் கொண்டமைந்தது. | பல்தேர்வு வினாக்கள் மற்றும் / அல்லது 50 சிறு வினாக்களைக் கொண்டமைந்தது.<br>புள்ளிகள் 100<br>காலம் –<br>1½ மணித்தியாலம் |

| *வினாப்பத்திரம்* | *பாடத்திட்டம்* | *வினாப்பத்திரத்தின் தன்மை* |
|---|---|---|
| 2. கிரகித்தல் | பரீட்சார்த்தியிடம் காணப்படும் விடயங்களைப் புரிந்து கொள்ளும் திறன், தொடர்பாடல் ஆற்றல், சாராம்சப்படுத்தல், விவரித்தல் மற்றும் படைப்பாற்றல் போன்ற ஆற்றல்களை மதிப்பிடுவதற்காகத் தயாரிக்கப்படும் புறவய வினாக்களைக் கொண்டமைந்தது. | பல்தேர்வு வினாக்கள் மற்றும் / அல்லது 50 சிறு வினாக்களைக் கொண்டமைந்தது.<br>புள்ளிகள் 100<br>காலம் - 02 மணித்தியாலம் |

11.1.2. இரண்டாம் பகுதி

அனைத்து விண்ணப்பதாரிகளும் இச் சிறப்புப் பகுதியின் அனைத்து வினாப்பத்திங்களுக்கும் தோற்றி ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் குறைந்தபட்சம் 40 புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

(I) வினாப்பத்திரக் கட்டமைப்பு :-

| *வினாப்பத்திரம்* | *காலம்* | *வினாப்பத்திரத்தின் தன்மை* |
|---|---|---|
| நிதி மற்றும் முகாமைத்துவக் கணக்கீடு | 03 மணித்தியாலம் | மொத்தப் புள்ளிகள் 100, சித்தியடையப் பெற வேண்டிய புள்ளிகள் 40. (வினாப்பத்திரம் 02 பகுதிகளைக் கொண்டமைந்தது)<br>(பகுதி I இற்கான புள்ளிகள் 60, பகுதி II இற்கான புள்ளிகள் 40) |
| உயர் கணக்காய்வு மற்றும் பொருளாதாரப் பகுப்பாய்வு | 03 மணித்தியாலம் | மொத்தப் புள்ளிகள் 100, சித்தியடையப் பெற வேண்டிய புள்ளிகள் 40. (வினாப்பத்திரம் 02 பகுதிகளைக் கொண்டமைந்தது)<br>(பகுதி I இற்கான புள்ளிகள் 60, பகுதி II இற்கான புள்ளிகள் 40) |

(II) பாடத்திட்டம்

நிதியியல் மற்றும் முகாமைத்துவக் கணக்கீடு
(இவ் வினாப்பத்திரம் 02 பகுதிகளைக் கொண்டமைந்திருப்பதோடு, 08 வினாக்களையும் கொண்டமைந் துள்ளது)

**பகுதி I - நிதியியல் கணக்கீடு**

இப் பகுதி (05) வினாக்களைக் கொண்டமைந்தது. முதலாவது வினா கட்டாயமானது என்பதுடன், எஞ்சிய நான்கு (04) வினாக்களுள் இரண்டு (02) வினாக்களைத் தெரிவு செய்தல் வேண்டும். ஒவ்வொரு வினாவுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும்.

1. **கட்டாய வினா** :

இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பயன்பாடு பற்றி பரீட்சார்த்தியிடமுள்ள திறமைகளை அளவிடுவது இவ்வினா மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த வினாவில் ஐந்து உப பகுதிகள் உள்ளதோடு, ஒவ்வொரு பகுதிக்கும் 04 புள்ளிகள் வழங்கப்படும்.

இந்த வினா பின்வரும் இலங்கை கணக்கீட்டு நியமங்களை (இ.க.நி) உள்ளடக்கியிருக்கும்.

- நிதிக் கூற்றுக்கள் - இ.க.நி 1
- சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் - இ.க.நி 16
- வருவாய் இ.க.நி 18

- காசுப்பாய்ச்சல் கூற்று - இ.க.நி 7
- பொருள் இருப்புகள் - இ.க.நி 2
- கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள் - இ.க.நி 8
- அறிக்கையிடும் காலப்பகுதிக்குப் பின்னரான நிகழ்வுகள் - இ.க.நி 10
- குத்தகைகள் - இ.க.நி 17
- வருமான வரி - இ.க.நி 12
- ஏற்பாடுகள், எதிர்பாரா சொத்துக்கள் மற்றும் எதிர்பாரா பொறுப்புக்கள் - இ.க.நி 37
- நிதிச் சாதனங்கள் - இ.க.நி 39

2. நிதிக் கூற்றுக்களுக்கான எண்ணக்கரு சார்ந்த மற்றும் ஒழுங்குமுறைக் கட்டமைப்பு

பொது குறிக்கோள்கள், நிதிக் கூற்றுக்களின் நோக்கங்கள், பயன்படுத்தும் அனுமானங்கள், நிதிக் கூற்றுக்களின் தரநிலை பண்புகள், நிதிக் கூற்றுக்களின் மூலங்களை இனங்காணல் மற்றும் அளவிடுதல், மூலதன எண்ணக்கருக்கள் மற்றும் மூலதனப் பராமரித்தல் எண்ணக்கரு, கூட்டுத்தாபன கட்டுப்பாடுகள் தொடர்பான ஏற்பாடுகள், கம்பனிச் சட்டங்கள் மற்றும் இலங்கை பிணைகள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள்.

3. திரட்டிய நிதிக்கூற்றுக்கள் உள்ளிட்ட வரையறுக்கப்பட்ட கம்பனிகளின் நிதிக்கூற்றுக்கள்

வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனியொன்றில் காணப்படும் நிதிமூலங்களினை அடையாளங் காணல், பங்குகள் மற்றும் தொகுதிக் கடன் பத்திரங்களை வழங்குதல் மற்றும் மீட்டல் தொடர்பான பேரேட்டுக் கணக்குளைத் தயாரித்தல், முகாமைத்துவ மற்றும் வெளியீட்டு நோக்கங்களுக்காக நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல்.

4. இலாபமீட்டாத அமைப்புக்களுக்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல்.

5. நிதிக்கூற்றுக்களின் பகுப்பாய்வு, நிதி பெறுபேறுகளின் வரைவிலக்கணம் மற்றும் தொடர்பாடல், நிதியல்லாத அறிக்கையிடல்.

**பகுதி II - முகாமைத்துவக் கணக்கீடு**

இந்தப் பகுதி பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் 03 வினாக்களைக் கொண்டிருக்கும் என்பதோடு, 02 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். ஒவ்வொரு வினாவுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும்.

1. கிரய கணக்கீட்டு அம்சங்கள்

கிரயங்களை வகைப்படுத்தல், கிரயங்களின் நடத்தை, மதிப்பீடு செய்தல், மூலப்பொருட்கள் மற்றும் இருப்புக் கட்டுப்பாடு, உழைப்புக் கிரயம், குறிப்பிட்ட மற்றும் தொடர்ச்சியான கட்டளை கிரயவியல்.

2. கிரயக் கணக்கீட்டு முறைகள்

உள்ளீட்டு கிரயவியல் மற்றும் எல்லை கிரயவியல், செயற்பாட்டு அடிப்படையிலான கிரயவியல், செயன்முறை கிரயவியல், உற்பத்திக் கணக்கீடு மற்றும் தற்கால முகாமைத்துவக் கணக்கீடு.

1. வியாபாரத்திற்கான நிதிக் கணிதம் மற்றும் கருத்திட்ட மதிப்பீட்டு அடிப்படைகள், கூட்டுதல், தள்ளுபடி செய்தல்.

2. நியமக் கிரயவியலும் முரண்கள் பகுப்பாய்வும்

3. வியாபாரச் செயற்பாடுகளுக்கான கணிதம்

4. வரவு செலவுத் திட்டமும் எதிர்வு கூறுதலும்

வரவு செலவுத் திட்டம், வரவு செலவுத் திட்டத் தயாரிப்பு மற்றும் வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாடுகள்.

5. நிச்சயமற்ற தன்மையின் கீழ் தீர்மானமெடுத்தல்

குறுகிய கால மற்றும் நீண்ட கால தீர்மானங்களை எடுப்பதற்கான தகவல்கள், கிரயம் - அளவு - இலாபப் பகுப்பாய்வு, மேலதிக செயன்முறை விலையிடல், பல்வேறு நிதிக்கட்டுப்பாடுகளுக்கான முடிவுகளை எடுத்தல்

6. தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

உயர் கணக்காய்வு மற்றும் பொருளாதாரப் பகுப்பாய்வு
(இவ்வினாப்பத்திரம் 02 பகுதிகளைக் கொண்டிருப்பதுடன், எட்டு (08) வினாக்களை உள்ளடக்கியுள்ளது.)

**பகுதி I – உயர் கணக்காய்வு**

இந்தப் பகுதி பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் 05 வினாக்களைக் கொண்டிருக்கும் என்பதோடு, 03 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். ஒவ்வொரு வினாவுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும்.

1. பல்வேறு வகை கணக்காய்வுகளும் அக் கணக்காய்வுகளின் நோக்கங்களும்

நிதிக் கணக்காய்வு, முறைமை கணக்காய்வு, இணக்கப்பாட்டுக் கணக்காய்வு, நிதிக் கணக்காய்வின் பெறுமதி, செயல்திறன் கணக்காய்வு, தடயவியல் கணக்காய்வு, உள்ளகக் கணக்காய்வு, வெளியகக் கணக்காய்வு, முகாமைத்துவக் கணக்காய்வு என்பன.

2. கணக்காய்வுத் திட்டமிடலும் கட்டுப்பாடும்

கணக்காய்வுத் திட்டமிடல், நேரம் குறித்தல், இடைக்கால மற்றும் இறுதிக் கணக்காய்வு, செயற்பாடுகளுக்குரிய பொறுப்புக்களை ஒப்படைத்தல், உள்ளகக் கட்டுப்பாட்டுப் பயன்பாடு உள்ளடங்கலாக செய்யப்பட்ட வேலைகளை அறிக்கையிடல், உள்ளகக் கட்டுப்பாட்டு மதிப்பீட்டிற்கான வினாக்கொத்துக்களையும் படிவங்களையும் தயாரித்தல்.

a. தொழில்முறை நடத்தைகளும் நெறிமுறைகளும்

நேர்மை, கணக்காய்வுச் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களைத் திரட்டுதல், மதிப்பீடு செய்தல் மற்றும் தொடர்பாடல் விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கல், தகவல்களின் இரகசியத் தன்மை, தொழில் நிபுணத்துவம், தொழில்முறைக் கடப்பாடுகள் மற்றும் அறிவு, திறமைகள் மற்றும் அனுபவங்களைப் பயன்படுத்துவதற்கான திறன்கள்.

b. சட்ட உரிமைகளும் பொறுப்புகளும்

கணக்காளர்களினதும் கணக்காய்வாளர்களினதும் சட்ட ரீதியான பொறுப்புகளும் இணைந்த சட்ட ஏற்பாடுகளும்

c. இடர் மதிப்பீடு மற்றும் முகாமைத்துவத்திற்கான நுட்பங்கள்

பல்வேறு வகையான இடர்கள், இடர் முகாமைத்துவச் செயல்முறை, நுட்பங்கள் மற்றும் சாதனங்களை அடையாளம் காணல் மற்றும் இடர் முகாமை

d. கணக்காய்வு நியமங்கள்

சர்வதேச கணக்காய்வு நியமங்கள் (ISAs) மற்றும் இலங்கை கணக்காய்வு நியமங்கள் (SLAuSs)

e. உள்ளகக் கணக்காய்வுக் கடமைகள்

உள்ளகக் கணக்காய்வுக் கடமைகளையும் உள்ளகக் கணக்காய்வின் நோக்கங்களையும் இனங்காணல், கணக்காய்வுக் குழுக்கள்.

f. சான்றுகளை சேகரித்தல்

சான்றுகளை சேகரிக்கும் வெவ்வேறு முறைகள் மற்றும் சான்றுகளை சேகரிக்கும் செயன்முறைகளை இனங்காணல், ஆதாரங்களின் செல்லுபடித்தன்மையை உறுதிப்படுத்தல்.

g. அறிக்கையிடல் தொழிற்பாடுகள்

அறிக்கை வகைகள், அறிக்கையிடல் நியமங்கள், கட்டமைப்பு, அறிக்கையிடும் செயல்முறை, கணக்காய்வு அபிப்பிராயங்கள் மற்றும் பின்னூட்டல் செயல்முறை போன்றவை.

**பகுதி II - பொருளாதாரப் பகுப்பாய்வு**

இந்தப் பகுதி பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் 03 வினாக்களைக் கொண்டிருக்கும் என்பதோடு, 02 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். ஒவ்வொரு வினாவுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும்.

1. பேரண்டப் பொருளாதார மாறிகளைப் புரிந்து கொள்ளல்

   பேரண்டப் பொருளாதார மாறிகள் மற்றும் பிரதான குறியீடுகள், பேரண்டப் பொருளாதார மாறிகளை மதிப்பீடு செய்வதன் நோக்கம்,பேரண்டப் பொருளாதார மாறிகளிடையே காணப்படும் பரஸ்பர தொடர்புகள் மற்றும் இலங்கையின் தற்போதைய நிலவரத்தை இனங்காணல்.

2. தேசிய வருமான நிர்ணயமும் தேசிய வருமானக் கணக்கீடும்

   தேசிய வருமானத்தை அளவிடும் முறைகள், தேசிய வருமானத்தின் துறைகள் ரீதியான பங்களிப்பு, மூலதன நுகர்வு, தனியார் நுகர்வு, தேசிய உற்பத்திகள் மற்றும் நலனோம்புகை மற்றும் இலங்கையின் தற்போதைய நிலவரம்

3. சர்வதேச வர்த்தகமும் பொருளாதார அபிவிருத்தியும்

   சர்வதேச வர்த்தகக் கோட்பாடுகள், சர்வதேச வர்த்தகமும் பொருளாதார அபிவிருத்தியும், சென்மதி நிலுவை, நாணயமாற்று நடத்தைகள், தற்போதைய இலங்கையின் நிலவரம்.

4. வெளிநாட்டு நிதி, வெளிநாட்டு நேரடி முதலீடுகள், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் கடன், நிலையான கடன் முகாமைத்துவம் மற்றும் இலங்கையின் தற்போதைய நிலவரம்

5. மூலதனம் மற்றும் நிதிச்சந்தை, நிதி இடைத்தரகர்கள் மற்றும் நிதிக் கருவிகள்

6. நாணயக் கொள்கை

7. அரசிறைக் கொள்கை

11.2. நேர்முகப் பரீட்சை

சாதாரண நேர்முகப் பரீட்சை மாத்திரம் நடாத்தப்படுவதோடு, பொதுப்பகுதியினதும் சிறப்புப் பகுதியினதும் அனைத்து எழுத்துமூல வினாப்பத்திரங்களுக்கும் உரிய புள்ளிகளின் ஆகக் குறைந்தது 40% அல்லது அதனிலும் கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகளில் மொத்தப் புள்ளிகளின் திறன் அடிப்படையில் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமனானவர்கள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு அதன் போது அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளமை உறுதிப்படுத்தப்படும் விண்ணப்பதாரிகள் நியமனத்திற்காக தெரிவு செய்யப்படுவர். நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

**கவனத்திற் கொள்க :-**

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதானது நியமனம் வழங்குவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பதாகக் கொள்ளப்பட மாட்டாது.

11.3. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தபால் மூலமாக அல்லது www.results.exams.gov.lk எனும் இணையத் தளத்தின் மூலமாக பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் தனிப்பட்ட முறையில் பெறுபேறுகள் அறிவிக்கப்படும்.

12. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இவ் அறிவித்தலில் மொழிகளுக்கிடையில் ஏதேனும் ஒரு பொருத்தமற்ற நிலை அல்லது இசைவின்மை காணப்பட்டால் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள அறிவித்தலுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய.

**ஜே.ஜே.ரத்னசிறி**
செயலாளர்,
அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

2021, யூலை மாதம் 30.

07-754

**நாடளாவிய சேவைகள் மற்றும் அரச சேவையின் நிறைவேற்றுத் தரப் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான பொதுப் போட்டிப் பரீட்சை - 2021**

மேற்குறித்த பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோருவதற்காக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2237 ஆம் இலக்க மற்றும் 2021.07.16 ஆம் திகதிய வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 2021.07.15 ஆம் திகதிய தமிழ் அறிவித்தலில் பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய அறியத் தருகின்றேன்.

| பிரிவு | திருத்தம் |
|---|---|
| முன்னுரை | இரண்டாவது பந்தியின் இறுதி வாக்கியம் பின்வருமாறு திருத்தியமைக்கப்படல் வேண்டும்.<br>"விண்ணப்பப்படிவங்களை 2021 யூலை மாதம் 17 ஆம் திகதி முதல் **2021 ஒகத்து மாதம் 23 ஆந் திகதி 24.00 மணி** வரை அனுப்பி வைக்க முடியும்." |
| 1 | முதலாவது வாக்கியம் பின்வருமாறு திருத்தியமைக்கப்படல் வேண்டும்.<br>"இப் பரீட்சையின் முதலாம் (பொது) பகுதியானது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் விதிமுறைகளுக்கு அமைவாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் **2021 செத்தெம்பர் அல்லது ஒற்றோபர்** மாதம் கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும்." |
| 6. (ஆ) I | இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2233/19 ஆம் இலக்க மற்றும் 2021.06.22 ஆம் திகதிய வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை விஞ்ஞான சேவையின் சேவைப் பிரமாணக்குறிப்பின் 05 ஆவது திருத்தத்திற்கு அமைவாக இலங்கை விஞ்ஞான சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான வயதெல்லை பின்வருமாறு திருத்தியமைக்கப்படல் வேண்டும்.<br>"விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் தினத்தன்று (2021.07.16) வயது இருபத்து இரண்டு (22) வருடங்களுக்குக் குறையாதவராகவும் **முப்பத்தைந்து (35) வருடங்களுக்கு** மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்." |
| 6. (ஆ) II | தொடரிலக்கம் 2. இலங்கை கணக்காளர் சேவையின் கல்வித் தகைமைகளின் கீழான உப பிரிவு (iii) இன் "நிறுவனம்சார் படிமுறை II பரீட்சை" என்பது<br>**"நிறுவனம் சார் படிமுறை பரீட்சை"** எனத் திருத்தியமைக்கப்படுதல் வேண்டும். |
| 6. (ஆ) III - தொடரிலக்கம் 2 | ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி) மற்றும் உதவிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி) ஆகிய இரண்டு பதவிகளுக்குமான கல்வித் தகைமைகளின் இலக்கம் IV பின்வருமாறு திருத்தியமைக்கப்படுதல் வேண்டும்.<br>"IV உயிரியல் விஞ்ஞானமாணி பட்டம் அல்லது **விவசாயம் தொடர்பான நான்கு வருட விஞ்ஞானமாணி பட்டத்துடன்** மேற்குறித்த ஏதேனுமொரு பாடத்தில் பட்டப்பின் படிப்பு" |
| 6. (ஆ) III - தொடரிலக்கம் 3 | தேசிய விலங்கியல் பூங்கா திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் பதவிக்கான கல்வித் தகைமைகளுடன் பின்வரும் இலக்கம் II உள்ளடக்கப்படுதல் வேண்டும்.<br>"II **மேற்குறித்த பாடங்களுள் ஏதேனுமொரு பாடத்தை பிரதான பாடமாகக் கொண்ட வகுப்புச் சித்தியுடனான பொது விஞ்ஞானமாணி பட்டம்**" |
| 6. (ஆ) III - தொடரிலக்கம் 4 | அரசாங்க இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்தின் அரசாங்க உதவி இரசாயன பகுப்பாய்வாளர் பதவிக்கான தகைமைகள் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுதல் வேண்டும்.<br>"I. இரசாயனவியல், **உயிர் இரசாயனவியல், அணு உயிரியல் அல்லது இரசாயனவியல் தொழிநுட்பம்** போன்ற பாடங்களில் ஒரு பாடத்தில் வகுப்புச் சித்தியுடனான விஞ்ஞானமாணி விசேட பட்டம், அல்லது<br>II. **மேற்குறித்த ஏதேனும் ஒரு பாடத்தில்** விஞ்ஞானமாணி விசேட பட்டம் அல்லது **மேற்குறித்த ஏதேனும் ஒரு பாடத்தை** பிரதான பாடமாகக் கொண்ட பொது விஞ்ஞானமாணி பட்டத்துடன் **உயிர் இரசாயனவியல் அணு உயிரியல், பகுப்பாய்வு இரசாயனவியல் அல்லது தடய** இரசாயனவியல் (**Forensic Chemeistry) /தடயவியல்** பட்டப்பின் படிப்பு." |

| | |
|---|---|
| | அரசாங்க இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்தின் சந்தேகத்திற்கிடமான ஆவணங்கள் தொடர்பான உதவி பகுப்பாய்வாளர் பதவியின் இலக்கம் III இன் தகைமைகள் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுதல் வேண்டும்.<br><br>“கல்விப் பொதுத்தராதர (உயர்தர) பரீட்சையில் விஞ்ஞான பிரிவின் கீழ் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்று கணினி விஞ்ஞானம், தகவல் தொழிநுட்பம் அல்லது தகவல் முறைமை போன்ற பாடங்களில் ஒரு பாடத்தில் **முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு** சித்தியுடனான விஞ்ஞானமாணி விசேட பட்டம் அல்லது” |
| 6. (ஆ) III - தொடரிலக்கம் 5 | வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் பதவிக்கான கல்வித் தகைமைகளுடன் பின்வரும் உபபிரிவு V பின்வருமாறு திருத்தியமைக்கப்படுவதோடு உபபிரிவு VII ஐ உள்ளடக்குதல்.<br><br>“V உயிரியல் விஞ்ஞானமாணி பொது அல்லது சிறப்புப் பட்டத்ததுடன் அல்லது **விவசாயம் தொடர்பான நான்கு வருட விஞ்ஞானமாணி பட்டத்துடன் மேற் குறிப்பிட்ட IV இல் குறிப்பிடப்பட்டுள்ள** ஒரு பாடத்தில் பட்டப் பின் படிப்பு<br><br>“VII **விலங்கியல், தாவரவியல் மற்றும் உயிரியல் போன்ற பாடங்களில் ஆகக் குறைந்தது இரண்டு பாடங்களைப் பிரதான பாடங்களாகக் கொண்ட வகுப்புச் சித்தியுடனான பொது விஞ்ஞானமாணி பட்டம்**” |
| 6. (ஆ) III - தொடரிலக்கம் 6 | வன பாதுகாப்பு திணைக்களத்தின் உதவி வனப் பாதுகாப்பாளர் பதவிக்கான கல்வித் தகைமைகளின் II மற்றும் V ஆம் உப பிரிவுகள் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுதல் வேண்டும்.<br><br>“II முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடனான விஞ்ஞானமாணி வனவியல் **அல்லது சூழலியல்** பட்டம்”<br><br>“V உயிரியல் விஞ்ஞானமாணி பட்டம் அல்லது **விவசாயம் தொடர்பான நான்கு வருட விவசாய விஞ்ஞானமாணி** பட்டத்துடன் வனவியல், தாவரவியல், உயிரியல், விவசாயம், சூழலியல் அல்லது பெருந்தோட்ட முகாமைத்துவப் பட்டப்பின் படிப்பு” |
| 6. (ஆ) III - தொடரிலக்கம் 9 | கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கருவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பெருந்தோட்ட பயிர்ச்செய்கை அபிவிருத்தி மற்றும் அது சார்ந்த கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் உதவிப் பணிப்பாளர் பதவியின் இலக்கம் IV இன் தகைமைகள் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுதல் வேண்டும்.<br><br>“IV உயிரியல் விஞ்ஞானமாணி பட்டம் அல்லது **விவசாயம் தொடர்பான நான்கு வருட விஞ்ஞானமாணி** பட்டத்துடன் மேற்குறித்த ஏதேனும் ஒரு பாடத்தில் பட்டப்பின் படிப்பு” |
| 6. (ஆ) III - தொடரிலக்கம் 10 | சுகாதார அமைச்சின் ஆராய்ச்சி உத்தியோகத்தர் (பூச்சியியல்) மற்றும் பூச்சியியலாளர் பதவிகளுக்கான கல்வித் தகைமைகளின் I ஆவது உப பிரிவின் “பூச்சியியலை ஒரு பாடமாகக் கொண்ட” என்பது “பூச்சியியலை விசேட பாடமாகக் கொண்ட” எனத் திருத்தியமைக்கப்படுதல் வேண்டும். |

2. 2021, ஓகத்து 23 ஆந் திகதி 24:00 மணி வரை விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

3. முதல் அறிவித்தலுக்கு அமைவாக 2021, யூலை 31 ஆந் திகதி வரை விண்ணப்பப்படிவங்களுக்கான பரீட்சைக் கட்டணம் செலுத்தியுள்ள எவரேனும் விண்ணப்பதாரி ஒருவர் சேவைகளுக்கு/சேவையொன்றின் பதவிகளுக்கு தான் வழங்கியுள்ள விருப்பத் தெரிவு ஒழுங்கை இத் திருத்தத்திற்கு அமைவாக மாற்றம் செய்ய வேண்டுமாயின் அதன் பொருட்டு இலங்கை பரீட்சை திணைக்களத்தின் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள www.doenets.lk/downloads ஊடாக விருப்பத்தெரிவுகளின் திருத்தத்திற்கான விண்ணப்பப்படிவத்தைத் தரவிறக்கம் செய்து, உரியவாறு பூர்த்தி செய்து விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்குக் கிடைக்கக்

கூடியவாறு நிறுவனம் சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கை பரீட்சை திணைக்களம், த.பெ. 1503, கொழும்பு எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மற்றும் slexamcomp@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "நாடளாவிய சேவைகள் மற்றும் அரச சேவையின் நிறைவேற்றுத் தரப் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான பொதுப் போட்டிப் பரீட்சை – 2021 – விருப்பத் தெரிவுகளின் திருத்தம்" எனத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

**குறிப்பு** : விருப்பத் தெரிவுகளுக்கான விண்ணப்பப்படிவத்தின் அச்சுப்பிரதியை பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் கட்டாயமானதாகும். அச்சுப் பிரதி தபாலில் காணாமற் போனதாக அல்லது தாமதமானதாகக் குறிப்பிட்டு செய்யப்படும் முறைப்பாடுகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது. விருப்பத் தெரிவுகளுக்கான விண்ணப்பப்படிவத்தினை மின்னஞ்சல் முகவரி ஊடாக சமர்ப்பித்திருப்பினும், அதன் அச்சுப்பிரதி உரிய தினத்தன்று பரீட்சை ஆணையாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்படாத சந்தர்ப்பத்தில், முதல் விண்ணப்பப்படிவத்தின் விருப்பத்தெரிவு ஒழுங்கு தொடர்ந்தும் செல்லுபடியானதாகக் கருத்திற் கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

4. இது தொடர்பில் மேலதிக தகவல்கள் தேவைப்படுமாயின் வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் 0112136607 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சிரேஷ்ட உதவி செயலாளர் (நியமனங்கள்) அவர்களிடம் வினவ முடியும்.

எம்.ஏ.பீ. தயா செனரத்,
செயலாளர்,
அரசாங்க சேவைகள் ஆணைக்குழு.

07-755

---

## தொழில் அமைச்சு

வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகத்தில் சுருக்கெழுத்தாளர் (சிங்களம்) தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2021

இது, வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகத்தில் சுருக்கெழுத்தாளர் (சிங்களம்) தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2021 என்று 2021.06.25 ஆந் திகதியிடப்பட்ட 2234 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் தொடர்பானது.

மேற்சொல்லப்பட்ட அறிவித்தல் பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது.

### திருத்தம்

வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகத்தில் சுருக்கெழுத்தாளர் (சிங்களம்) தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2021 இற்கு விண்ணப்பங்களைக் கோருவதற்கான அறிவித்தல் மேலுள்ள வர்த்தமானியின் 05 95.7) இல் குறிப்பிடப்பட்டுள்ள **விண்ணப்பிப்பதற்கான முடிவுத் திகதி 2021.08.09 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது** என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேலும், சொல்லப்பட்டுள்ள அறிவித்தலின் 05 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக்கூடிய வயதெல்லை, விண்ணப்ப முடிவுத் திகதியான 2021.08.09 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு மாற்றப்படுகின்றது.

எம். பி. டி. யூ. கே. மாபா பத்திரண,
செயலாளர்,
தொழில் அமைச்சு.

தொழில் அமைச்சு,
2021, யூலை 28.

07-756

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.